2nd November 1966]

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற கோரிக்கைகள் இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

* 337 **கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்காவில் எத்தனை இடங்களில் (Primary Health Centres) ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எப்போது இவைகளுக்கான வேலைகள் மேற்கொள்ளப் படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) திருமானூர், அரியலூர், டி. பாலூர், செந்துறை ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டானில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் நியமிக்கப்பட்டவுடன் அது செயல்படத் தொடங்கும். ஆண்டிமடம் வளர்ச்சி வட்டாரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்த 1966 ஜூலையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, ஆண்டிமடத்தில் ஏற்பட இருக்கிறது என்றார்கள். ஜெயங்கொண்டானில் மருத்துவ மனை வருவதுபற்றி இரண்டு, மூன்று முறை கேட்டும் விமோசனம் இல்லை. அங்கு கட்டடம் கட்டுவது எப்படியிருக்கிறது ? பெரிய மருத்துவ மனையாக ஆக்குவதுபற்றிக் கவனிக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜெயங்கொண்டானில் மீன்சுருட்டியில் வைக்கவேண்டும் என்று போட்டிருக்கிறது.

கட்டுமரத்திற்குத் தேவையான காட்டுவகை மரம்

* 338 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கட்டுமரத்திற்குத் தேவையான அல்பீஸியா மரம் நமது ராஜ்யத்தில் எங்கேனும் பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

[2nd November 1966

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : காடுகள் துறை கன்னியாகுமரி மாவட்டத்தில் 1964-ம் ஆண்டில் 20 ஏக்கரா பரப்பளவிலும், 1965-ம் ஆண்டில் 21 ஏக்கரா பரப்பளவிலும் காட்டு வாகை மரங்களை முன்னோடி வகையில் பயிரிட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : முன்பு நான் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கிறபோது இந்த அல்பீஸியா மரம் குற்றாலம் மலையில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் கொடுக்கப்பட்டது. அதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தகவல் இல்லையா ? ராஜ்யம் முழுமைக்கும் இப்போது கேரளா, இலங்கை இந்தப் பகுதிகளில் இருந்துதான் கட்டுமரத்திற்காக வந்து கொண்டிருக்கும் இந்த மரம் போதுமானதாக இல்லாததால் ராஜ்யம் முழுவதிலும் எந்தெந்தப் பகுதிகளில் சாத்தியமோ அங்கங்கே இந்த அல்பீஸியா மரம் பயிர் செய்வது பற்றிக் கவனிக்கப்படுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : எக்ஸ் பெரிமெண்டலாகத்தான் போட்டிருக்கிறோம். புதுமாதிரியான போட்கள் எல்லாம் வருவதன் காரணமாக இந்த மரத்திற்குக் கிராக்கி இருக்குமா, ஃபிஷர்மென்னுக்கு இவை தேவையாக இருக்குமா என்று தெரியவில்லை. இதை நட்டு, பத்து ஆண்டு களுக்குப் பிறகுதான் அதை வெட்டி கட்டுமரமாக ஆக்கமுடியும். ஆகவே கிராக்கி எப்படியிருக்கிறது, இதற்கு பிரியம் இருக்கிறதா என்று பார்த்துச் செய்யவேண்டும். இதற்குமேல் வைக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இப்போது ஸ்பெஷல் போட்ஸ் அல்லது மெக்கானைஸ்ட் போட்ஸ் வந்திருந்தும் ஆயிரக்கணக்கான பேர் கட்டுமரத்தை வைத்துக்கொண்டுதான் பிழைக்கிறார்கள். அந்தக் கட்டுமரத்திற்கான மரம் வெளியிலிருந்து வந்தது இப்போது தடைபட்டிருக்கிறது. ஆகவே உடனடியாக, அவசர மாக இதைக் கவனித்து இதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இவ்வளவு தான் விவரங்கள் இருக்கின்றன. மேலும் ஏதாவது தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் ஃபிஷரிஸ் டிப்பார்ட்மெண்ட் மினிஸ்ட் ரிடம் கேட்கவேண்டும்.

Regional Khadi Godown in Madras

* 339 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any manipulation of accounts of the Regional Godown in Madras between July 1964 and March 1965 resulting in loss to the State Khadi and Village Industries Board has been discovered; and

(*b*) if so, the details thereof?